யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

# தவணைப் பரீட்சை, யூலை - 2016

# Term Examination, July - 2016

| தரம் :- 12 (2017) | பொதுச் சாதாரணப் பரீட்சை | இரண்டு மணி முப்பது நிமிடம் |
|---|---|---|

**கவனிக்க :**

❖ 1 - 60 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, விடைத்தாளில் அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமையப் புள்ளடி (X) இடுக.

01) 2015 செப்ரெம்பர் 30 ஆந் திகதி தேர்தல்கள் திணைக்களத்தின் எத்தனையாவது ஆண்டு நிறைவு விழா அனுஷ்டிக்கப்பட்டது?

(1) 50 (2) 60 (3) 100 (4) 125 (5) 150

02) ஐ. நா வில் அண்மையில் ஒரு நாட்டின் கொடி முதன் முதலாக ஏற்றப்பட்டது. அந்நாடு யாது?

(1) கிரேக்கம் (2) பலஸ்தீனம் (3) மியன்மார் (4) லிதுவேனியா (5) வட கொரியா

03) 2015 டிசெம்பர் மாதம் சென்னை நகரில் ஏற்பட்ட வெள்ளப் பாதிப்புக்கு முக்கிய காரணம் எதுவென டில்லி அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் தெரிவித்தது?

(1) வரைமுறையற்ற வளர்ச்சி
(2) பருவநிலை மாற்றமும் அதீத மழையும்
(3) நீர் வளங்களின் நிலத்தடி இணைப்புகள் துண்டிக்கப்பட்டமை
(4) நீர் வளங்களின் நிலமேல் இணைப்புகள் துண்டிக்கப்பட்டமை
(5) மவுலிவாக்கம் கட்டட விபத்து

agaram.lk

04) 2016 சனவரி மாதம் பாகிஸ்தான் பிரதமர் இலங்கை வந்திருந்தார். இதன் பிரகாரம் இரு தரப்பினரும் எத்தனை புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டனர்?

(1) 4 (2) 5 (3) 6
(4) 7 (5) 8

05) 2015 டிசெம்பர் மாதம் பறப்பு எண் MF 9268 ஐக் கொண்ட ஒரு சர்வதேசப் பயணி ஆகாய விமானம் பறந்து கொண்டிருந்தபோது வெடித்து வீழ்ந்தது. இவ்விமானம் பின்வரும் எந்நாட்டைச் சேர்ந்தது?

(1) எகிப்து (2) ரஷ்யா (3) மலேசியா
(4) இந்தோனேசியா (5) சிங்கப்பூர்

06) இலங்கையில் தொற்றா நோய்கள் காரணமாக வருடாந்தம் இறக்கும் மக்களின் எண்ணிக்கை ஏறத்தாழ

(1) 30 (2) 300 (3) 3 000
(4) 30 000 (5) 300 000

07) அப்துல் கலாம் பற்றிப் பின்வருவனவற்றில் எது பிழையானது?



(1) அவர் விண்வெளி பொறியியலில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றார்.
(2) அவர் பாரத ரத்னா விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட சனாதிபதி ஆவார்.
(3) அவர் கல்கத்தாவில் பிறந்தார்.
(4) அவர் இலங்கைக்கு விஜயம் செய்தார்.
(5) அவரின் பிறந்த நாள் ஐ. நா வினால் உலக மாணவர் தினமாக அறிவிக்கப்பட்டது.



Scanned with CamScanner

08) 2015 டிசெம்பர் மாதம் ஒரு நாடு தனது நாணய அலகாக சீன நாணய அலகை ஏற்றுக்கொண்ட
அந்நாடு யாது?
(1) சிம்பாவே (2) லிதுவேனியா (3) காம்பியா
(4) ருவண்டா (5) ரியூனிசியா

09) 2016 ஆம் ஆண்டில் அதிக ஒஸ்கார் விருதுகளைப் பெற்ற திரைப்படம் யாது?
(1) மாட்மக்ஸ் பியூறிரோட் (2) ஸ்பொட்லைட் (3) சன் ஒப் சோல்
(4) தி பிக் ஷார்ட் (5) ஹேட்ஃபுல் எயிட்

10) இலங்கையிலுள்ள ஒரு பிரதேசத்தை பௌத்த சாசன அமைச்சு புனித பூமியாகப் பிரகடனம் செய்து உத்தியோகபூர்வமாக வர்த்தமானி மூலம் அறிவித்தது. அந்த இடம் அமைந்துள்ள மாவட்டம் யாது?
(1) கண்டி (2) அனுராதபுரம் (3) திருகோணமலை
(4) வவுனியா (5) யாழ்ப்பாணம்

11) கடந்த ஆண்டின்போது நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் இன்புளுவென்சா வகை *A* இனால் பீடிக்கப்பட்டும், பலர் இறந்தும் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. இக்குறித்த வைரசு இனம்
(1) H1N1 (2) H2N2 (3) H3N2
(4) H5N1 (5) H7N7

12) அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா 2007 இல் அனுப்பிய ஒரு விண்கலம் 2015 ஏப்ரல் மாதம் செவ்வாய், வியாழன் கிரகங்களுக்கிடையில் இருக்கும் 'கெரஸ்' என்ற குறுங்கோளை அடைந்தது. அவ்விண்கலத்தின் பெயர் யாது?
(1) பிலே (2) லிசா (3) ஓரியன் (4) மங்கள்யான் (5) டோடன்

13) அண்மையில் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் காரணமாக பின்வரும் எந்நாட்டில் 1000 பாடசாலைகள் மூடப்பட்டன?
(1) கிரேக்கம் (2) வட கொரியா (3) தென்னாபிரிக்கா (4) பிரான்ஸ் (5) அமெரிக்கா

agaram.lk

14) 2015 டிசெம்பர் மாதம் கொழும்பு மாநகர சபையின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட நாணயக் குற்றியின் பெறுமதி யாது?
(1) ரூ.100 (2) ரூ.150 (3) ரூ.500 (4) ரூ.1 000 (5) ரூ.5 000

15) மோதல் தவிர்ப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, இந்து - பௌத்த பூகோள வேலைத்திட்ட மாநாடு அண்மையில் இந்தியாவில் நடைபெற்றது. அதில் இலங்கை சார்பாக பங்கு பற்றிய பிரதம அதிதி யார்?
(1) மைத்திரிபால சிறிசேன (2) ரணில் விக்கிரமசிங்க (3) சந்திரிகா குமாரதுங்க
(4) கரு ஜயசூரிய (5) சம்பிக்க ரணவக்க

16) 2016 ஆம் ஆண்டு உலக வங்கியின் அறிக்கைப்படி இலங்கையின் மிகவும் வறுமை மிகுந்த மாவட்டமாக குறிப்பிடப்பட்டது எம்மாவட்டமாகும்?
(1) மன்னார் (2) முல்லைத்தீவு (3) வவுனியா
(4) மட்டக்களப்பு (5) கிளிநொச்சி

17) அண்மையில் காலமாகிய சுனில் ஹெட்டியாராச்சி
(1) எழுத்தாளராவார். (2) புகைப்படக் கலைஞராவார். (3) பொறியியலாளராவார்.
(4) ஓவியராவார். (5) நடிகராவார்.

18) உலகிலேயே நாடளாவிய ரீதியில் வளிக்கூடு (பலூன்) வடிவத்திலான இணைய வசதியை பெறும் முதலாவது நாடு இலங்கை ஆகும். கூகுளினால் (Google) வடிவமைக்கப்பட்ட இவ்வளிக்கூடுகள் எத்தனை இந்து சமுத்திரத்தின் மேலுள்ள வளிமண்டலத்தில் பறக்க விடப்பட்டுள்ளது?
(1) 17 (2) 15 (3) 13 (4) 9 (5) 5

19) 2016 சனவரி 01 ஆந் தேதியிலிருந்து ஐ.நா பாதுகாப்புச் சபையின் தற்காலிக உறுப்பு நாடுகளாக தெரிவு செய்யப்பட்டுள்ள 4 நாடுகளின் சரியான தொகுதி எது?
(1) எகிப்து, யப்பான், உக்ரைன், உருகுவே
(2) எகிப்து, யப்பான், உக்ரைன், பரகுவே
(3) யப்பான், உக்ரைன், உருகுவே, பலஸ்தீனம்
(4) செனகல், உக்ரைன், உருகுவே, தென்கொரியா
(5) செனகல், யப்பான், லெபனான், எகிப்து

20) 2016 சனவரி மாதம் இலங்கையின் மிகப் பெரிய தானியக் களஞ்சியம் அமைக்கப்பட்ட இடம் யாது?
(1) தலவாக்கொல்லை
(2) புல்மோட்டை
(3) மகரகம
(4) மொனராகலை
(5) லுனுவில

21)
$$\begin{array}{r} A \;\; B \;\; E \\ A \;\; D \;\; E \\ +A \;\; C \;\; E \\ \hline 2 \;\; 0 \;\; 1 \;\; 6 \\ \hline \end{array}$$
எனின், $A+B+C+D+E$ இன் பெறுமானம் யாது?

(1) 21 (2) 24 (3) 27 (4) 29 (5) 32

22) ஓர் உலோகக் கம்பியின் நீளம் $24\,m$ ஆகும். இது முக்கோண வடிவில் வளைக்கப்படின், வெவ்வேறு நீளங்களையுடைய எத்தனை முக்கோண வடிவங்களைப் பெறலாம்? (நீளங்கள் முழு எண் பெறுமானங்களை உடையன.)

(1) 6 (2) 8 (3) 12 (4) 13 (5) 15

23) கமலா ரூ. 12 இற்கு ஒரு தொகை அம்பரெல்லாக் காய்களை வாங்கினாள். ஒன்றின் விலை 20 சதம் குறைந்ததாயிருப்பின், மேலும் இரண்டு காய்களை அவளால் வாங்கக் கூடியதாய் இருந்திருக்கும். ஓர் அம்பரெல்லாக் காயின் விலை யாது?

agaram.lk

(1) ரூ. 1.00 (2) ரூ. 1.10 (3) ரூ. 1.20 (4) ரூ. 1.30 (5) ரூ. 1.40

24) மருந்து வில்லைகளைக் கொண்ட ஒரு பெட்டியிலுள்ள மருந்து வில்லைகளின் திணிவு $\frac{3}{4}\,kg$ ஆகும். ஒரு மருந்து வில்லையின் திணிவு $0.375\,g$ ஆகும். பெட்டியிலுள்ள மருந்து வில்லைகளின் எண்ணிக்கை யாது?

(1) 2 (2) 20 (3) 200 (4) 2 000 (5) 20 000

25) வட்டவடிவான பாதைச் சுற்று வளைவு ஒன்று இரண்டு ஒரு மைய வட்டங்களினால் எல்லைப் படுத்தப்பட்டுள்ளது. உள் வட்டத்தின் விட்டம் $140\,m$ உம் இரண்டு வட்டங்களுக்குமிடையிலுள்ள இடைவெளி $7\,m$ உம் ஆகும். வெளி வட்டத்தின் பரிதி வழியே நடக்கும் ஒருவரை விட உள் வட்டத்தில் நடக்கும் ஒருவர் எவ்வளவு தூரம் ($m$ இல்) குறைவாக நடப்பார்?

(1) 11 (2) 22 (3) 33 (4) 44 (5) 55


26) அம்ஹர், சுரேன் ஆகிய இரண்டு நண்பர்களுக்கு இரண்டு அதிஷ்ட இலாபச் சீட்டு வெற்றிகள் கிடைத்திருந்தன. சுரேன் பெற்ற பணத்திலும் 40% கூடுதலாக அம்ஹர் பெற்றிருந்தான். அவர்கள் பெற்ற பணம் சமனாவதற்கு அம்ஹரின் பணத்தில் சுரேனுக்குக் கொடுக்க வேண்டிய பின்னம் யாது?

(1) $\frac{1}{10}$ (2) $\frac{1}{7}$ (3) $\frac{1}{5}$ (4) $\frac{1}{3}$ (5) $\frac{1}{2}$



Scanned with CamScanner

27)




$A, B$ ஆகியவற்றை மையங்களாகக் கொண்டு இரண்டு வட்டங்கள் $P, Q$ என்பவற்றில் இடைவெட்டுகின்றன. $P\hat{B}Q = 90^0$, $P\hat{A}Q = 60^0$ ஆயின், $A$ ஐ மையமாகவுடைய வட்டத்தின் பரப்பளவிற்கும் $B$ ஐ மையமாகவுடைய வட்டத்தின் பரப்பளவிற்கும் இடையிலான விகிதம் யாது?

(1) $\sqrt{2}$ (2) 2 (3) $\sqrt{3}$ (4) 3 (5) $\sqrt{5}$

28) ஒரு தீப்பெட்டியின் நீளம், உயரம், அகலம் என்பன முறையே $6\ cm$, $4.5\ cm$, $1.5\ cm$ ஆகும். $36\ cm$ நீளமும் $18\ cm$ அகலமும் உடைய அடியைக் கொண்ட ஒரு பெட்டியின் அடியை மறைப்பதற்குத் தேவையான அதிகூடிய தீப்பெட்டிகளின் எண்ணிக்கை யாது?

(1) 96 (2) 86 (3) 76 (4) 66 (5) 56

29) ஒரு நீண்ட பையினுள் 1 000 பூச்சி உருண்டைகள் அடைக்கப்படுகின்றன. அவை சிவப்பு, நீலம், பச்சை, மஞ்சள், வெள்ளை என்ற ஒழுங்கில் ஒன்றன் பின் ஒன்றாக ஒரு நேர் வரிசையில் இடம்பெறுமாறு அடைக்கப்படுகின்றன. இறுதிப் பூச்சி உருண்டையின் நிறம் யாது?

(1) சிவப்பு (2) நீலம் (3) பச்சை (4) மஞ்சள் (5) வெள்ளை

30) பண்டிகைக் காலத்தில் ஒரு விற்பனை நிலையத்திலிருந்த விளம்பரம் வருமாறு :

"குறித்த விலைக்கு இரண்டு மேற்சட்டைகளை வாங்கும்போது மேலுமொரு மேற்சட்டை ரூபா 100 இற்கு வழங்கப்படும்."

ராஜன் இவ்விற்பனை நிலையத்தில் 12 மேற்சட்டைகளை வாங்குவதற்கு ரூபா 9 600 ஐ முதலீடு செய்கிறான். ஒரு மேற்சட்டையின் குறித்த விலை யாது?

(1) ரூ. 950 (2) ரூ. 1 050 (3) ரூ. 1 100 (4) ரூ. 1 150 (5) ரூ. 1 200

31) ஒரு பிழையான நேரத்தைக் காட்டும் கடிகாரம் மணித்தியாலத்திற்கு 8 நிமிடத்தை கூட்டிக் காட்டும். பி.ப 1.00 மணிக்கு சரியான நேரத்தை இக்கடிகாரம் காட்டுமாயின் பி.ப 5.15 ஐ இது காட்டும் போது உண்மை நேரம் யாது?

(1) பி.ப 3.45 (2) பி.ப 4.15 (3) பி.ப 4.30 (4) பி.ப 4.45 (5) பி.ப 5.15

32) ஒரு பையில் 6 கையுறைகள் 4 நிறங்களில் உள்ளன. ஒருவர் எழுமாறாக 3 கையுறைகளை எடுக்கிறார். ஒரே நிறச் சோடியைப் பெற குறைந்தது எத்தனை கையுறைகளை அவர் எடுக்க வேண்டும்?

(1) 1 (2) 2 (3) 3 (4) 4 (5) 5

33) 3 காற்சட்டைகள் வாங்கும் பணத்திற்கு 2 பைகள் வாங்கலாம். 1 பை வாங்கும் பணத்திற்கு 12 பேனைகள் வாங்கலாம். 2 பேனைகள் வாங்கும் பணத்திற்கு 5 புத்தகங்கள் வாங்கலாம். 3 காற்சட்டைகள் வாங்கும் பணத்திற்கு எத்தனை புத்தகங்கள் வாங்கலாம்?

(1) 5 (2) 15 (3) 30 (4) 45 (5) 60

34) $a, b$ என்பன நேர் எண்கள்.

$a * b = \sqrt{a + \sqrt{b}}$ எனின், பின்வருவனவற்றில் எது நேர் எண் ஆகும்?


(1) $11 * 5$ (2) $4 * 1$ (3) $4 * 16$ (4) $7 * 4$ (5) $9 * 9$

agaram.lk



Scanned with CamScanner


35)



உருவில் **உள்ள** முக்கோணிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(1) 30 (2) 35 (3) 40 (4) 45 (5) 50

36) பின்வரும் எவ்வுருக்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சமச்சீர்க் கோடுகள் உள்ளன?




(1) $A, B$ (2) $A, C$ (3) $A, D$ (4) $B, C$ (5) $C, E$

37) ஒரு நேரிய $700\,m$ நீளமுள்ள வேலியில் 235 கம்பங்கள் சம தூரங்களில் உள்ளன. அதனை ஒத்த $1\,400\,m$ நீளமுள்ள ஒரு வேலியில் எத்தனை கம்பங்கள் இருக்கும்?

(1) 468 (2) 469 (3) 470
(4) 471 (5) 472

38) மண்டபம் $A$ யின் நீளம் அதன் அகலத்தின் இரு மடங்காகும். மண்டபம் $B$ யின் நீளம் மண்டபம் $A$ யின் நீளத்திலும் பார்க்க $5\,m$ குறைவாகவும் மண்டபம் $B$ யின் அகலம் மண்டபம் $A$ யின் அகலத்திலும் பார்க்க $3\,m$ கூடுதலாகவும் உள்ளன. இரு மண்டபங்களும் ஒரே பரப்பளவைக் கொண்டிருப்பின், மண்டபம் $B$ யின் அகலம் யாது?


(1) $15\,m$ (2) $16\,m$ (3) $17\,m$
(4) $18\,m$ (5) $19\,m$

agaram.lk

39) ரூ. 300 விலையுள்ள ஒரு பொருளின் மீதான வரி 5% இலிருந்து 8% வரைக்கும் மாறுமெனின், பொருளின் கிரயம் யாது?

(1) ரூ.310 (2) ரூ.312 (3) ரூ.314
(4) ரூ.318 (5) ரூ.325

40)




பின்வருவனவற்றில் எது ஆறாம் ஒழுங்கமைப்பில் உள்ள வட்டங்களின் எண்ணிக்கையைத் தருகின்றது?

(1) 63 (2) 61 (3) 59
(4) 57 (5) 55



Scanned with CamScanner

❖ 41 தொடக்கம் 45 வரையான வினாக்கள் கீழே காட்டப்பட்டுள்ள முக்கோணி, சதுரம், சரிவகம் ஆகியவற்றைக் கொண்டமைந்த வரிப்படத்தைச் சார்ந்து உள்ளன.




41) இந்த வரிப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள மூன்று உருவங்களுக்கும் பொதுவான எண் எது?

(1) 8 (2) 7 (3) 6 (4) 4 (5) 10

42) இரு உருவங்களுக்கு மட்டும் பொதுவான எண்களின் கூட்டுத்தொகை எவ்வளவு?

(1) 10 (2) 14 (3) 18 (4) 21 (5) 25

43) முக்கோணியில் மட்டும் உள்ளடக்கப்பட்டுள்ள எண்களின் கூட்டுத்தொகை மூன்று உருவங்களுக்கும் பொதுவான எண்ணினால் பெருக்கப்படும்போது பெறப்படும் எண் யாது?

(1) 120 (2) 105 (3) 100 (4) 90 (5) 60

44) எண்களை அதிகளவில் உள்ளடக்கிய உருவத்தினுள் உள்ள எண்களின் கூட்டுத்தொகையிலிருந்து எண்களைக் குறைந்த எண்ணிக்கையில் உள்ளடக்கிய உருவத்தில் உள்ள எண்களின் கூட்டுத்தொகையைக் கழிக்கும்போது பெறப்படும் விடை யாது?

(1) 11 (2) 19 (3) 22 (4) 27 (5) 28

agaram.lk

45) முக்கோணியினுள் உள்ளடக்கப்பட்டுள்ள எண்களின் கூட்டுத்தொகை சரிவகத்தில் மட்டும் உள்ளடக்கிய எண்களின் கூட்டுத்தொகையினால் பெருக்கும்போது பெறப்படும் விடை யாது?

(1) 650 (2) 600 (3) 510 (4) 225 (5) 195

❖ 46 தொடக்கம் 50 வரையான வினாக்கள் பின்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை.

ஒரு கூட்டில் 4 பறவைகள் வீதம் இருக்குமாறு 4 கூடுகளில் 4 கிளிகள் 4 மைனாக்கள் 4 நாகணவாய்கள் 4 புறாக்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கமைய இடப்பட்டுள்ளன.

- கிளி இல்லாத ஒரு கூடு இருக்க முடியாது.
- நாகணவாய்கள் இருக்கும் கூடுகளில் புறாக்கள் இருக்க முடியாது.
- ஒரே கூட்டில் இரு மைனாக்களுக்கு மேல் இருக்க முடியாது.
- பறவைகள் இருக்கும் வீதம் சமமாகவுள்ள கூடுகள் இருக்க முடியாது.

46) மைனாக்கள் இல்லாத கூடுகளில் இருக்கும் புறாக்களின் எண்ணிக்கை

(1) 0 (2) 1 (3) 2 (4) 3 (5) 4

47) 2 வகைப் பறவைகள் மாத்திரம் இருக்க முடியாதது

(1) 0 (2) 1 (3) 2 (4) 3 (5) 4

48) மைனாக்கள் இல்லாத கூடுகளில் இருக்கும் நாகணவாய்களின் எண்ணிக்கை

(1) 0 (2) 1 (3) 2 (4) 3 (5) 4



Scanned with CamScanner

49) ஒரு குறித்த கூட்டில் இருக்கும் பறவைகளின் எண்ணிக்கை சரியாக இடம்பெறும் விடை


(1) கிளி 1 மைனா 1 நாகணவாய் 1 புறா 1
(2) கிளி 1 மைனா 1 நாகணவாய் 2 புறா 0
(3) கிளி 1 மைனா 2 நாகணவாய் 0 புறா 1
(4) கிளி 1 மைனா 3 நாகணவாய் 0 புறா 0
(5) கிளி 1 மைனா 0 நாகணவாய் 1 புறா 2

50) இரு வகைப் பறவைகள் மாத்திரம் இருக்கும் கூடுகளிடையே ஒரு கூட்டில் இருக்கும் இரு வகைப் பறவைகளும் எவை?

(1) கிளிகளும் மைனாக்களும்
(2) கிளிகளும் நாகணவாய்களும்
(3) மைனாக்களும் நாகணவாய்களும்
(4) மைனாக்களும் புறாக்களும்
(5) நாகணவாய்களும் புறாக்களும்

❖ 51 தொடக்கம் 55 வரையான வினாக்களுக்கு குறிப்பிட்ட தொடர்களை ? ஆல் காட்டப்படும் பெறுமானத்தை தெரிந்தெடுக்க.

51)




(1) 14 (2) 16 (3) 22 (4) 28 (5) 32

52)


| | | |
|---|---|---|
| 2 | 4 | 25 |
| 1 | 4 | 22 |

| | | |
|---|---|---|
| 3 | 2 | 19 |
| 1 | 5 | 31 |

| | | |
|---|---|---|
| 4 | 4 | 37 |
| 1 | 3 | ? |


(1) 15 (2) 22 (3) 31 (4) 44 (5) 50

53)




(1) 44 (2) 46 (3) 48 (4) 50 (5) 52

54)





(1) 0 (2) 4 (3) 7 (4) 8 (5) 16

agaram.lk



Scanned with CamScanner


55)




(1) 6 (2) 10 (3) 13 (4) 17 (5) 25


❖ 56 தொடக்கம் 60 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து உருக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றில் நான்கு உருக்கள் பொதுச் சிறப்பியல்பை உடையன. இச்சிறப்பியல்பைக் கொண்டிராத உருவைத் தெரிவு செய்க.

56)




(1) (2) (3) (4) (5)

57)




(1) (2) (3) (4) (5)

58)




(1) (2) (3) (4) (5)

59)



(1) (2) (3) (4) (5)

60)



(1) (2) (3) (4) (5)

agaram.lk



Scanned with CamScanner

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
Field Work Centre
தவணைப் பரீட்சை, யூலை - 2016
Term Examination, July - 2016

FWC

| தரம் :- 12 (2017) | புள்ளித்திட்டம் | பொதுச் சாதாரணப் பரீட்சை |
|---|---|---|

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01) | 2 | 21) | 4 | 41) | 2 |
| 02) | 2 | 22) | 3 | 42) | 3 |
| 03) | 1 | 23) | 3 | 43) | 2 |
| 04) | 5 | 24) | 4 | 44) | 4 |
| 05) | 2 | 25) | 4 | 45) | 3 |
| 06) | 4 | 26) | 3 | 46) | 4 |
| 07) | 3 | 27) | 1 | 47) | 3 |
| 08) | 1 | 28) | 1 | 48) | 4 |
| 09) | 1 | 29) | 4 | 49) | 3 |
| 10) | 4 | 30) | 4 | 50) | 2 |
| 11) | 3 | 31) | 4 | 51) | 5 |
| 12) | 5 | 32) | 2 | 52) | 1 |
| 13) | 5 | 33) | 5 | 53) | 5 |
| 14) | 3 | 34) | 4 | 54) | 4 |
| 15) | 3 | 35) | 4 | 55) | 3 |
| 16) | 2 | 36) | 3 | 56) | 5 |
| 17) | 5 | 37) | 2 | 57) | 3 |
| 18) | 3 | 38) | 4 | 58) | 5 |
| 19) | 1 | 39) | 4 | 59) | 1 |
| 20) | 4 | 40) | 1 | 60) | 2 |

agaram.lk



Scanned with CamScanner